DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.313/2023**

**prosecution witness: PW– 1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

A1, A2 present.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | மஞ்சுளா | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**28.05.2024**

**முதல் விசாரணை:–**

1.நான் இராமேஸ்வரம் சத்யா நகரில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 1 வருடத்திற்கு முன்பு என் வீட்டிலிருந்து அனைவரும் தூத்துக்குடிக்கு விழாவிற்காக சென்றிருந்தோம். செல்லும்போது எங்கள் வீட்டு கதவை பூட்டி சாவியை சுவிட்ச் போர்டு முன்பு வைத்து விட்டு சென்றுவிட்டோம்.

2.இரண்டு நாட்கள் கழித்து வீட்டிற்கு இரவு 10.00 மணிக்கு வந்து சாவியை எடுத்து உள்ளே சென்று பார்த்தபோது டிவி ஸ்டாண்டில் இருந்த லேப்டாப் காணாமல் போயிருந்தது. பின்னர் சந்தேகப்பட்டு பீரோவை திறந்து பார்த்தபோது 4 கிராம் எடையுள்ள ADMK கொடி பதிக்கப்பட்ட தங்க மோதிரம் ஒன்று, 2 கிராம் எடையுள்ள ஒரு ஜோடி தங்க தோடு, தங்க கல்பதிக்கப்பட்ட மூக்குத்தி ஒன்று ஆகியவைகள் காணாமல் போயிருந்தது. லேப்டாப்பின் மதிப்பு ரூ.50,000/– ஆகும். மறுநாள் காலை நகர் காவல்நிலையத்தில் நான் காணாமல் போன பொருட்களை பற்றி சொல்லி புகார் மனு கொடுத்தேன். என்னிடம்காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **புகார் மனு அ.சா.ஆ.1** ஆகும்.

3.சில நாட்கள் கழித்து காணாமல் போன பொருட்கள் கிடைத்துவிட்டதாக நகர் காவல்நிலையத்தில் இருந்து எனக்கு தகவல் வந்தது. அதன்பின்னர் நான் நீதிமன்றத்தில் மனு செய்து காணாமல் போன பொருட்களை பெற்றுக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:—</u>**

1. 1ம் எதிரி பால்பாண்டி குடும்பத்தார் திமுகவைச் சார்ந்தவர்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புகார் கொடுத்தபின்பு எவ்வளவு நாட்கள் கழித்து காணாமல் போன பொருட்கள் கிடைத்தது என்று தெரிந்தது என்றால் 3 மாதம் கழித்து தான் அந்த பொருட்கள் கிடைத்த விபரம் தெரியவந்தது. எதிரிகள் இருவரும் எங்கள் தெருவைச் சேர்ந்தவர்கள் அருகருகே வசித்து வருகிறார்கள்.

2.நான் புகார் மனு கொடுத்ததாக சொல்லப்படும் புகார் மனுவில் எத்தனாம் தேதி புகார் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காணாமல் போன பொருட்கள் எனக்கு சொந்தம் என்று ஆவணங்கள் எதுவும் காவல்நிலையத்தில ஒப்படைக்கவில்லை. உண்மையில் திருடு போயிருந்தால் சம்பவம் நடந்த அன்றைய தினமே புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல சம்பவம் நடந்த மறுநாளே புகார் கொடுத்துவிட்டேன். நான் கொடுத்த புகார் மனுவில் எந்தவிதமான அடித்தல் திருத்தல் எதுவும் கிடையாது. புகார் கொடுத்த அன்று மட்டும் தான் காவல்நிலையம் சென்றேன். அதற்கு பின்பு நான் காவல்நிலையம் செல்லலவில்லை என்றால் சரிதான். என்னை இந்த வழக்கில் போலீசா விசாரித்து தனியாக வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றாலும், எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும் சரியல்ல.

ஒம்/—S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.313/2023**

**prosecution witness: PW– 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

A1, A2 present.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குருசாமி | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**<u>28.05.2024</u>**

**முதல் விசாரணை:–**

1.நான் இராமேஸ்வரம் சத்யா நகரில் வசித்து வருகிறேன். நான் 108 ஆம்புலன்சில் மருத்துவ உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 1 வருடத்திற்கு முன்பு விசேசத்திற்காக வீட்டை பூட்டிவிட்டு சாவியை சுவிட்ச் போடு மீது வைத்து விட்டு அனைவரும் தூத்துக்குடிக்கு சென்றுவிட்டோம்.

2.விசேசம் முடிந்து இரண்டு நாட்கள் கழித்து வீட்டிற்கு மாலை 06.00 மணியளவில் வந்து வீட்டை திறந்து பார்த்தபோது என் மனைவி லேப்டாபை காணவில்லை என்று கூறினார். பின்னர் பீரோவில் வைத்திருந்த AM என்று பொறிக்கப்பட்ட அரை கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று, ஒரு ஜோடி தங்க தோடு ஆகியவைகள் காணாமல் போய்விட்டதாக என் மனைவி கூறினார்.

3.நான் வீட்டிற்குள் தேடிபார்த்து கிடைக்கவில்லை அதனால் நான் மறுநாள் வேலைக்கு சென்றுவிட்டேன். நான் வேலைக்கு சென்றுவிட்டு திரும்பி வந்து நகர் காவல்நிலையத்தில் என் மனைவி புகார் கொடுத்தார். எதிரிகளை கடற்கரையில் கைது செய்து நகர் காவல்நிலைய போலீசார் காணாமல் போன பொருட்களை அடையாளம் காட்ட சொன்னார்கள். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து மேற்படி பொருட்களை பெற்றுக்கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1.இராமேஸ்வரம் சத்யா நகர் மிக நெருக்கமாக வீடுகள் உள்ள பகுதி என்றால் சரிதான். அந்த பகுதியில் சின்ன சண்டை சச்சரவுகள் ஏற்பட்டால் கூட பொதுமக்கள் வேகமாக கூடும் பகுதி என்றால் சரியல்ல. எதிரிகளை எந்த கடற்கரையில் கைது செய்து என்னை அடையாளம் காண்பிக்க கூப்பிட்டார்கள் என்றால் துறைமுகம் காவல்நிலையத்திற்குட்பட்ட துறைமுகம் கடற்கரை.

2. நான் அண்ணா திமுகவைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். 108 ல் வேலை செய்வதால் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் உடனடியாக புகார் கொடுக்க வேண்டும் என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். எதிரிகள் திமுக குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது வீட்டில் எந்த விதமான சேதாரங்கள் ஏற்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து உடனடியாக புகார் கொடுத்தோமா என்றால் உடனடியாக புகார் கொடுத்தோம். எனது மனைவி புகார் கொடுத்தார் அதில் நானும், எனது தகப்பனாரும் கையொப்பம் செய்தோம். என்னை போலீசார்விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்

3.எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும், அரசியல் முன்விரோதம் சம்பந்தமாக இந்த வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.313/2023**

**prosecution witness: PW– 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

A1, A2 present.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : அழகர் | ஜாதி | : |
| க/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**28.05.2024**

**முதல் விசாரணை:–**

1.நான் இராமேஸ்வரம் சத்யா நகரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நாங்கள் விசேசத்திற்கு ஊருக்கு சென்றிருந்தோம். பின்னர் விசேசம் முடிந்து வீட்டிற்கு வந்து பார்த்தபோது அ.சா.1 வீட்டில் உள்ள லேப்டாப், மோதிரம் ஒன்று, ஒரு ஜோடி தங்க தோடு, ஒரு மூக்குத்தி ஆகியவைகள் காணாமல் போயிருந்ததாக சொன்னார்கள்.

2.வீட்டில் இரண்டு நாட்கள் தேடிப்பார்த்து விட்டு பின்னர் காவல்நிலையம் சென்று அ .சா.1 புகார் கொடுத்தார். ஆஜர் எதிரிகள் மேற்படி பொருட்களை திருடியதாக போலீசார் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

1.எதிரிகள் இருவரும எங்கள் வீட்டிற்கு அருகில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரிகள் தான் திருடினார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொல்லிதான் இந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 எனது மருமகள் நடைபெறாத சம்பவத்திற்கு கொடுக்கப்பட்ட புகார் மனுவிற்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலீசார்விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்

2.எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்